**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.99** **நாள் : 27.06.2024**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில் சுற்றித்திரியும் மாடுகள் மற்றும் நாய்களால் ஏற்படும் இடையூறுகளுக்கு தீர்வு காணும் பொருட்டு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

இன்று (27.06.2024) மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில் சுற்றித்திரியும் மாடுகள் மற்றும் நாய்களால் ஏற்படும் இடையூறுகளுக்கு தீர்வு காணும் பொருட்டு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் திருமதி எஸ். அமிர்த ஜோதி, இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர்கள் டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., (சுகாதாரம்), திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., (வருவாய் (ம) நிதி), வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), பிராணிகள் நல வாரிய தலைமை செயல் அலுவலர் திரு.சுரேஷ் சுப்ரமணியம், உறுப்பினர் ஸ்ருதி, காவல் இணை ஆணையாளர் (போக்குவரத்து) திரு.மகேஷ் குமார், இ.கா.ப., காவல் துணை ஆணையாளர்கள் திருமதி ஸ்ரேயா குப்தா, இ.கா.ப., (பூக்கடை), டாக்டர் ஜி.வனிதா, இ.கா.ப., (கீழ்ப்பாக்கம்) (பொ), மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், கால்நடை மருத்துவ அலுவலர் டாக்டர் கமால் உசேன் மற்றும் மண்டல நல அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மாண்புமிகு மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக சாலைகள் மற்றும் தெருக்களில் சுற்றித்திரியும் மாடுகள் முதல் முறையாக பிடிபட்டால் ரூ.5,000/- அபராதமும், இரண்டாவது முறையாக பிடிபட்டால் ரூ.10,000/- அபராதமும் மாட்டின் உரிமையாளர்களுக்கு விதிக்கப்படுகிறது.

2023ஆம் ஆண்டு 4,237 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ.92,04,700/- அபராதமும், 2024ஆம் ஆண்டு 25.06.2024 வரை 1,212 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ.43,85,000/- அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் சட்டசபையில் அறிவித்தபடி, மூன்றாவது முறையாக பிடிபடும் மாடுகளை ஏலம் விடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், பிடிபடும் மாடுகளைப் பராமரிப்பதற்காக சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் வருவாய் துறையினருடன் இணைந்து கூடுதல் இடங்கள்

கண்டறியப்பட்டு அவற்றில் மாடுகளை வைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாடுகளைப் பிடிக்கும்போது விதிக்கப்படும் அபராதத் தொகையினை மேலும் அதிகப்படுத்தி வசூலித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கண்காணிப்பின்றி தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகள் பிடிக்கப்படும் பொழுது அவற்றை அடையாளப்படுத்த மைக்ரோ சிப் பொருத்தவும், அதன் மூலம் அதே மாடு மூன்றாம் முறை பிடிபட்டால் அவற்றை ஏலம் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் சுற்றித் திரியும் மாடுகளால் பொதுமக்களுக்கு காயம் ஏற்பட்டாலோ, விபத்து ஏற்பட்டாலோ, அல்லது மாடுபிடிக்கும் பணியின் போது உரிமையாளர்கள், மாநகராட்சிப் பணியாளர்களுக்கு இடையூறு ஏற்படுத்தி பணி செய்ய விடாமல் தடுத்தாலோ அவர்கள் மீது கடுமையான சட்டப் பிரிவின் கீழ் காவல்துறை மூலம் வழக்குப் பதிவு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மக்கள் நெருக்கடி அதிகம் உள்ள குறிப்பிடத்தக்க இடங்களில் மாடுகளை வளர்த்திடவும், வெளியில் விடவும் தடை செய்வதற்கு சட்ட ஆலோசனைகளைப் பெற்று அரசுக்கு கருத்துரு அனுப்பப்படும்.

சாலைகள் மற்றும் தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்கள் மாநகராட்சி பணியாளர்களால் பிடிக்கப்பட்டு, விலங்குகள் நல வாரிய வழிகாட்டுதலின்படி கருத்தடை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, வெறிநாய்க்கடி நோய்ப் தடுப்பூசி செலுத்தப்படுகிறது. இதற்காக 78 பயிற்சி பெற்ற நாய் பிடிக்கும் பணியாளர்கள், 16 நாய் பிடிக்கும் வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பிடிக்கப்படும் தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் வகையில் புளியந்தோப்பு, கண்ணம்மாபேட்டை, மீனம்பாக்கம், சோழிங்கநல்லூர், லாயிட்ஸ் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்கள் உள்ளன.

2023ஆம் ஆண்டு 19,640 நாய்கள் பிடிக்கப்பட்டு, 14,885 நாய்களுக்கும், 2024ஆம் ஆண்டு 24.06.2024 வரை 9,607 நாய்கள் பிடிக்கப்பட்டு, 6,966 நாய்களுக்கும் கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

தற்பொழுது, புளியந்தோப்பு, கண்ணம்மாபேட்டை மற்றும் லாயிட்ஸ் காலனி ஆகிய 3 மையங்கள் ரூ.20 கோடி மதிப்பில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இரண்டு புதிய நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்கள் தொடங்கப்பட உள்ளன. 7 நாய் பிடிக்கும் வாகனங்கள், நாய்களுக்கு தடுப்பூசி செலுத்தும் வகையில் 3 வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளது. இந்த ஆண்டு தெருநாய்களுக்கு கணக்கெடுப்பு பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்தார்.

**வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி**